செ.வெ.எண்.07 தேதி : 09.04.2021

# பத்திரிக்கைச் செய்தி

காந்தி அமைதி விருது ஆண்டுதோறும் தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு 1995 ஆம் ஆண்டு முதல் 125 - ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா அனுசரிக்கப்படுகிறது. காந்தி அமைதி விருது பெற இவ்விருதிற்கு கீழ்க்கண்ட தகுதியுடைய நபர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம்.

சமுதாயம், சமூக நீதி மற்றும் நல்லிணக்க ஒற்றுமை சார்ந்த சமூக சேவையில் ஈடுபடும் தனிநபர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி நிலையில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழுற்ற மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லுதலில் ஆர்வமுள்ள தனிநபர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். அரசியலில் நேர்மையாக அகிம்சை வழியில் ஈடுபடுவர்கள், ஆண், பெண் இனபேதமின்றி கறுப்பர், வெள்ளையர் மற்றும் இந்தியரல்லாதோர்க்கும் காந்தி அமைதி விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

கடந்த பத்தாண்டுகளில் சமுதாயத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல எழுதப்பட்ட (சமுதாயத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய ) நூல் மற்றும் அதற்கு முன்பு வெளியிடப்பட்ட நூலெனில் அதன் தாக்கம் தற்சமயம் எதிரொலிப்பதாக இருந்தாலும் காந்தி அமைதி விருது பெற விண்ணப்பிக்கலாம். மேற்கண்ட இனங்களில் தகுதியான நபர் அல்லது தொண்டு நிறுவனம் இருப்பின் 12.04.2021 - அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரக வளாகம் அரியலூரில் அறை எண் 20-ஐ, அனுகவும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.**